DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 43 /2019

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Nahoorhanifa | Father/Husband Name: Seit | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 24.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலூர் காந்தி நகரில் வசிக்கிறேன். வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 19.12.16ம் தேதி பகல் 12 மணியளவில் என் வீட்டிற்கு பின்புறம் 1-வது எதிரியின் வீடும், அதனருகில் எனக்கு பாத்தியப்பட்ட காலி இடமும், நகராட்சியின் வடிகால் கால்வாயும் உள்ளது. என் வீட்டிற்கு பின்புறம் உள்ள எனது இடத்தில் வாசல்படியில் நாங்கள் நடக்கக்கூடாது என்று கூறி கல்லுக்கால்களை ஊண்டிவைத்தார். நான் கழிவுநீர் கால்வாயில் சிமென்ட் ஸ்லாப் போடுவதற்காக பாண்டி, மயில், சாகுல்ஹமீது ஆகியோர்களை வரவழைத்து கழிவுநீர் கால்வாயை சுத்தம் செய்ய சொல்லியிருந்தேன். பின்னர் நான் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது எதிரிகள் 3 பேரும் என்னை வழிமறித்து எங்கடா போற தேவடியா மகனே உன்னை வெட்டாமல் விடமாட்டோம் என்று சொல்லி அடிக்க வந்தார்கள். அதனால் ஒன்றும் தெரியாமல் நான் வீட்டிற்குள் ஓடினேன். அப்போது எதிரிகள் 3 பேரும் அத்துமீறி எனது சுற்றுப்புற சுவருக்குள் நுழைந்தபோது அங்கு வேலை செய்துகொண்டிருந்த, நான் அழைத்து வந்த 3 நபர்களும் அவர்கள் தடுத்தும் கேட்காமல் அத்துமீறி வீட்ற்குள் வந்தார்கள். வெளியே வாடா உன்னை வெட்டி கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டுச்சென்றனர். பின்னர் நான் மேலூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதில் நடவடிக்கை எடுக்காததால் மேலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் எதிரிகளின்மீது 23.03.17ம் தேதி வழக்கு பதிவு செய்யவேண்டி மனு தாக்கல் செய்தேன். அதன்பேரில் போலீசார் என்னை அழைத்து விசாரித்து எதிரிகளின்மீது வழக்கு பதிவு

செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகும். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 43 /2019

Deposition of witness for: PW - 2

Name :Pandi Father/Husband Name: Santhiveeran

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 24.02.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலூர் வினோபா காலணியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை சம்பவத்தன்று மட்டும் பார்த்திருக்கிறேன். அதற்கு முன்பு தெரியாது. கடந்த 19.12.16ம் தேதி காலை 10 மணிக்கு நான் அ.சா.1ன் வீட்டிற்கு வேலைக்கு சென்றிருந்தேன். பகல் 12 மணியளவில் நான் சாக்கடை அள்ளிக்கொண்டிருந்தபோது எதிரிகள் 3பேரும் வந்து சிமெண்ட் ஸ்லாப் போடக்கூடாது என்று சொல்லும்போது அ.சா.1 எங்களை போடுமாறு சொன்னார். தகராறுக்கு இடையில் நான், என் தம்பி மயில் மற்றுமொரு நபர் நின்றுகொண்டிருந்தோம். எதிரிகள் கூடுதலாக அசிங்கமாக, ஜாதியை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள், நாங்கள் அவர்களை விலக்கிவிட்டோம். எதிரிகள் அ.சா.1ஐ அசிங்கமாக திட்டி அடிப்போம் வைப்போம் என்று சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் வேலை செய்யாமல் சென்றுவிட்டோம். போலீசார் 3 மாதங்கள் கழித்து என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: சந்தர்ப்பம் அளித்தும் செயள்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 43 /2019

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Sahulhameedu | Father/Husband Name: Katharbava | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 24.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கரையிப்பட்டியில் வசிக்கிறேன். வைக்கோல் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை சம்பவத்தன்று மட்டும் பார்த்திருக்கிறேன். அதற்கு முன்பு தெரியாது. கடந்த 19.12.16ம் தேதி பகல் 12 மணியளவில் அ.சா.1-ன் மருமகன் வீட்டில் சிலாப்பு கல்லுகளை தூக்கி போடச்சொன்னார்கள், எதிரிகள் 3 பேரும் போடக்கூடாது என்று சொல்லி சண்டை போட்டார்கள். அந்த கல்லை இதில் போடக்கூடாது, போட்டால் உன்னை வெட்டிபுடுவேன், குத்திப்புடுவேன் என்று கூறினார்கள். அப்போது எதிரிக் 3 பேரும் அ.சா.1-ன் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது நாங்கள் அ.சா.1ஐ வீட்டிற்குள் அனுப்பி வைத்தோம். அதன்பிறகு தகராறு நடந்து இருவரும் சென்றுவிட்டார்கள். நான் சென்றுவிட்டேன். போலீசார் 3 மாதங்கள் கழித்து என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: சந்தர்ப்பம் அளித்தும் செயள்யவில்லை.